DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 27/2021 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **கருப்புசாமி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 05.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருவாரூரில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் சிவகங்கை மாவட்டம் கிளாத்திரியில் குடியிருந்து வந்தேன். வழக்கின் எதிரியான கார்த்திக் (எ) அண்டங் கார்த்தி என்பவரை எனக்கு தெரியாது. எனக்கு இவ்வழக்கின் சாட்சியான சங்கையா என்பரை எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவுக்காரர் ஆவார். நான் திருவாரூரில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மதியம் 03.00 மணியளவில் இருந்த போது கிளாத்திரியில் சங்கையா என்பவருக்கு குண்டு வெடித்து காயம் பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் உடனே திருவாரூரில் இருந்து கிளம்பி வந்தேன். நான் வந்து பார்த்த போது அ.சா.2 சங்கையா என்பவருக்கு இடது காலில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் அவரிடம் காயங்கள் குறித்து ஏதும் கேட்கவில்லை.

பின்னர் காயம்பட்ட சங்கையாவை அவரது மனைவி 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது இந்த வழக்கு சம்பவத்திற்கு 3 மாதத்திற்கு முன்பு நான் சங்கையா என்பவர் வீட்டுக்கு அருகே நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரி கார்த்திக் (எ) அண்டங் கார்த்தி என்பவர் அவரது வீட்டு வாசல் முன்பாக மஞ்சள் கலர் சாக்குபையை ஓரத்தில் உள்ள மண்குவியலில் புதைத்து வைத்துக் கொண்டிருந்தார். அதன் பின்னர் கடந்த 14.06.2019-ம் தேதி மதியம் 03.45 மணிக்கு சங்கையா என்பவர் அந்த மண்குவியலை மிதித்தபோது எதிரி வைத்திருந்த வெடிகுண்டு வெடித்து சங்கையாவிற்கு இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டது என்றும் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சம்பவ காலத்தின்போது காயம்பட்ட சங்கையா என்பவர் வீட்டிற்கு அருகேயே தான் குடியிருந்தேன் என்றும் தற்போது எதிரி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.05 10:46:05 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**